විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

MINISTRY OF FOREIGN AFFAIRS, FOREIGN EMPLOYMENT AND TOURISM

**ஊடக வெளியீடு**

## இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக ரஷ்ய கட்டுமானத் துறை பிரதிநிதிகள் குழு இலங்கை வருகை

ரஷ்ய கூட்டமைப்பில் உள்ள இலங்கை தூதரகத்தின் ஏற்பாட்டில், ரஷ்ய கூட்டமைப்பின் தேசிய கட்டுமான வல்லுநர்கள் சங்கத்தின் (NOSTROY) உயர்மட்ட வணிகத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு 2026 ஜூலை 22 முதல் 25 வரையிலான விஜயமொன்றை மேற்கொண்டது.

இந்த உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவானது, 2026 ஜூலை 23 அன்று அமைச்சில், வெளிநாட்டுஅலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சர் அருண் ஹேமச்சந்திர மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க ஆகியோரைச் சந்தித்தது. பிரதிநிதிகள் குழுவை வரவேற்ற பதிற்கடமை அமைச்சர் ஹேமச்சந்திர, இலங்கைக்கும் ரஷ்ய கூட்டமைப்புக்கும் இடையிலான நீண்டகாலமானதும், சுமுகமானதுமான உறவுகளை எடுத்துரைத்ததுடன், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். இவ்விடயத்தில், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, முதலீடு மற்றும் ஆற்றல்மிகு தொழிலாளர்களின் இடப்பெயர்வு ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு இரு நாடுகளுக்கும் உறுதியான பொருளாதார நன்மைகளை உருவாக்கும் என்று பதில் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சுற்றுலாத்துறைப் பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க, இலங்கையின் சுற்றுலாத் துறையில், குறிப்பாக ஹோட்டல் அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பில் உள்ள முதலீட்டு ஆற்றலை வலியுறுத்தினார். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் முதலீட்டு சபை (BOI) போன்ற தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் மூலம், குறிப்பிட்ட சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் குறித்து அவர் பிரதிநிதிகளுக்கு விளக்கினார்.

பிரதிநிதி அந்தோணி மொரோஸ் தலைமையிலான இந்த தூதுக்குழுவில், முன்னணி ரஷ்ய கட்டுமான நிறுவனங்களைச் சேர்ந்த இருபத்தி நான்கு சிரேஷ்ட பிரதிநிதிகளும் தொழில்நுட்ப வல்லுநர்களும் இடம்பெற்றிருந்தனர். தங்களது பயணத்தின் போது, இந்த தூதுக்குழு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் முதலீட்டு சபை ஆகியவற்றுடனும் கலந்துரையாடியது. உட்கட்டமைப்பு மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. ரஷ்ய கூட்டமைப்பில் தகுதிவாய்ந்த இலங்கை கட்டுமான வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான வழிகளை ஆராய்வதற்காக, இத்தூதுக்குழு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக (SLBFE) அதிகாரிகளையும் சந்தித்தது.

NOSTROY என்பது ரஷ்யக் கூட்டமைப்பில் உள்ள கட்டுமானத் துறையின் மிகப்பெரிய சங்கமாகும். இது ரஷ்யாவிலும், சர்வதேச ரீதியிலும், பாதிக்கும் மேற்பட்ட அளவில் செயற்படும் கட்டுமான நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரஷ்ய கட்டுமானத் துறைக்குள் புத்தாக்கம், தொழில் தரநிலைகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இந்தச் சங்கம் ஒரு முன்னணிப் பங்கை வகிக்கிறது.

முதலீடு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கான இரு நாடுகளின் பகிரப்பட்ட ஈடுபாட்டை இவ்விஜயம் மீண்டும் உறுதிப்படுத்தியது.

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு**

**2026 ஜூலை 24**


| | | | |
|---|---|---|---|
| **Foreign Affairs**<br>විදේශ කටයුතු<br>வெளிநாட்டு அலுவல்கள் | **Republic Building, Colombo 1**<br>ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1<br>குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1 | 2 325 373/5, 2 207 200/7 | cypher@mfa.gov.lk |
| **Foreign Employment**<br>විදේශ රැකියා<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு | **17th Floor, "Mehewara Piyesa", Narahenpita, Colombo 5**<br>17 වන මහල, "මෙහෙවර පියෙස", නාරාහේන්පිට, කොළඹ 5<br>17 அவது தளம், "மெஹெவர பியெச",நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 | 2 331 200 | info@mfe.gov.lk |
| **Tourism**<br>සංචාරක<br>சுற்றுலாத்துறை | **No 03, Times Building, Bristol Street (Sir Razik Fareed Mw), Colombo 1**<br>අංක 03, ටයිම්ස් ගොඩනැගිල්ල, බ්‍රිස්ටල් වීදිය (සර් රාසික් ෆරීඩ් මාවත), කොළඹ 1<br>இல.03,டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் தெரு(சர் ராசிக் ஃபரீத் மாவத்தை),கொழும்பு 1 | 2 381 798, 2 321 222 | secretary@tourismmin.gov.lk |